# இந்து சாதனம்

சைவ பரிபாலன சபை வெளியீடு.

வெள்ளிக்கிழமை தோறும் வெளிவருவது

# HINDU ORGAN

செய்தித் தாளாகப் பதிவுபெற்றது

பிரதி விலை : சதம் 20.

ஆரம்பம: விரோதி ஷூ (1889) ஆவணிமீ 28-ம உ    அச்சகம: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, 450. காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம்    கொலைபேசி: 356

புத் - ௯0 ]   யாழ்ப்பாணம்:-   காலயுத்தி ஷூ   வைகாசி மீ   ௧௯ - ௨   வெள்ளிக்கிழமை ( ௨ - 6 - 1978 )   [ இல - எ


## ஜயந்திநகர் சிவசுப்பிரமணியசுவாமி கோயில்

# புனராவர்த்தன மகா கும்பாபிஷேகம்

வையிற் கதிர்வடி வேலோனை வாழ்த்தி வறிஞர்க் கென்றும்
நொய்யிற் பிளவள வேனும் பகிர்ந்துண்மின் நுங்கட்கிங்ஙன்
வெய்யிற் கொதுங்க வுதவா வுடம்பின் வெறுநிழல்போல்
கையிற் பொருளும் வாராது காணும் கடைவழிக்கே.

**கொழும்பு மாநகரில் ஜிந்துப்பிட்டியில் ஜயந்தி நகரில் அமைந்துள்ள ஸ்ரீ சிவ சுப்பிரமணிய சுவாமி கோயிலில் புனராவர்த்தன அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் வைகாசித் திங்கள் 26-ஆம் நாள் ( 9 - 6 - 1978 ) வெள்ளிக்கிழமை நிகழும்.**

கிரியா நிகழ்ச்சிகள் 6 - 6 - 78 ஆரம்பமாகும். தெக்ஷணத்தார் வேளாளர் மகமை பரிபாலனசங்கம் நிர்வகிக்கின்ற இத் திருக் கோயில் கொழும்பு மாநகரத்துக்கு அணியாக விளங்குகின்ற பொன்னம்பல வாணேசுவரர் கோயில் முத்து விநாயகர் கோயில் போன்று நன்கு பரிபாலிக்கப்பட்டு வருகின்றது.

கூட்டுப்பிரார்த்தனை நிகழ்ச்சிகள் இற்றைக்கு முப்பதாண்டுகளுக்கு முன் இக் கோயிலில் ஆரம்பிக்கப்பெற்று ஒழுங்காக நடைபெற இப்பொழுது மதுரை ஆதீன மகா சந்நிதானமாக ஞானபீடமேறி யிருந்து அருள் பாலிப்பவர் அக் காலத்திற் பெரு முயற்சி செய்து வந்தனர்.

---

# விசேட பட்டமளிப்பு

## கொழும்பு பல்கலைக்கழக வளாகத்தில் புதனன்று பொலிவாய் நிகழ்ந்தது

பன்னிரண்டாண்டுகளுக்குப் பின்னர் நடைபெற்ற பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில் கௌரவ பட்டங்கள் பெற்றோர் எண்மர்.

இவர்களுள் மிகப் பிரசித்தி பெற்றவர் இலக்கியச் செல்வர் பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள்.

பூணுக் கழகளிக்கும் பொற்றொடியின் பொற்பதனைக்
காணக் கலாநிதியாம் கௌரவத்தைப் — பேணும்
பெரியார் கணபதிப் பிள்ளைமா மேதை
உரியார். புகழ்தமிழுக் (கு) ஓர்.

நாவலர் ஐயாவுக்குப் பின் இந்நாட்டில் இலங்கி வந்த தமிழ்ப் பேரறிஞர்கள் வரிசையில் இளையவர் பண்டிதமணி. முன் சென்றவர்கள் பண்டிதமணியின் ஆசிரியர்களாயிருந்தவர்கள். சுன்னைக் குமாரசுவாமிப் புலவர் தொடக்கம் வித்துவான் சுப்பையபிள்ளை வரையுள்ள கல்விமான்களுக்கெல்லாம் யாழ் அகம் நன்றியறிதலாயிருப்பதுபோலக் கலாநிதி கணபதிப்பிள்ளை அவர்களுக்கும் பெரு நன்றியுடையவர்களாயிருக்கின்னர் தமிழ் மக்கள்.

பட்டமளிப்பு விழாவிலே பண்டிதமணி கணபதிப் பிள்ளை சமுகங் கொடுக்கவில்லை. பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரம் பிள்ளை கலந்துகொண்டனர். அறிமுக உரையை யாழ்வளாகத்தலைவர் பேராசிரியர் சு வித்தியானந்தன் நிகழ்த்தும்பொழுது நாவலர் வழியிற் பண்டிதமணியும் ஒரு அறிஞர் குழாத்தை உருவாக்கி யுள்ளனர் என்றும் பண்டிதமணியிடம் பயின்றோம் என்பதில் இக் குழாத்தினர் பெருமையடைவர் எனவும் பாராட்டினர்.

அகிலம் போற்றும் ஆராய்ச்சியாளர் என்று பேராசிரியர் மீனாட்சிசுந்தரனாரைப் பேராசிரியர் வித்தியானந்தன் புகழ்ந்தனர்

### சனாதிபதியின் சற் போதனை

பட்டமளிப்பு விழாவிற் கலந்துகொண்ட சனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன அவர்கள அந்த அறிஞர் பேரவையில் சற்போதனைகள் பதிகத்தைச்சமர்ப்பித்து நல்லதொரு முன் மாதிரியை முன் வைத்தனர். தாம் சமத்துவத்தையும் சாந்தத்தையும் கைப்பிடிப்பதாகவும் கூறினர்.

---

### மாவையில் மகாசங்காபிஷேகம்

திருப்பணி வேலையில் மகா மண்டபம் அமைப்பு நிறைவுறும் தொண்டு சார்பாக வருகிற வெள்ளிக்கிழமை மகா சங்காபிஷேகம் மாவைக் கந்தன் கோயிலில் நடைபெற இருக்கின்றது

---

## வேலணையிலுமா இந்த வேதனை ?

சைவப் பழமை வாய்ந்த வேலணையிற் சில கோயில்களிற் பசுவதை நிகழ்வதாக வேதனையுடன் அறிகின்றோம்,

ஊருக்கும் முன்னோருக்கும் உபத்திரவத்தை உண்டுபண்ணும் ஒவ்வாத செயலைச் செய்பவர்களை தாழ்மையுடன் வேண்டுகின்றோம் — தவிருங்கள் இந்த அதர்மத்தை என்று

---

## மதமாற்றத்தை வழிமறிக்க வகைசெய்த பெரியார்

ஆசிரியராக மாணுக்கர்களை நன்னெறிப்படுத்திய சைவப் பெரியார் ஏனையோரையும் சைவ வாழ்வு வாழப் பயிற்சி அளிக்கும் வகையில் உழைத்து வந்தார். இக்காலத்துச் சொற்பெருக்காளர் எழுத்தாளர் போன்று தம்மை விளம்பரமு செய்யும் அறையில் ஈடுபடாது உண்மைத் தொண்டினை அமைவாக ஆற்றினர் திரு. சு. சி. பிள்ளை அவர்கள்.

சைவ போதம் தொடர் வெளியீடுகள் மாணுக்கர்கள் மத்தியில் ஒரு புத்துணர்ச்சியை உண்டுபண்ணின. ஆசிரியர்கள் அவற்றை வரவேற்று ஆவலுடன் பாடங்கள் அமைத்தனர். நியாயத்தோடு நெறியை உறுதிப்படுத்தும் வகையிலே இப்புத்தகங்கள் சைவத்தைப் போதிக்க உதவின.

சைவ சமயமே சமயம் என்று ஆன்றோர் கூறி வந்திருப்பதை மீண்டும சொல்லுவார். ஆனல் அதற்கு நேரடியான நியாயமும் எடுத்துக் காட்டுவர்.

விலக்கப்படவேண்டிய தீவினைகள் யாவற்றையும் விலக்க வேண்டும் என்று விதிப்பது சைவ சமயம் ஒன்றே என்று சைவப் பெரியார் ஆணித்தரமான காரணம் காட்டுவதொன்றே அவர்தம் ஆசிரிய ஆற்றலை நன்கு புலப்படுத்தும்,

சைவ போதம் முதலாம் புத்தகத்திலே சைவப் பெரியார் புராணக் கதைகளை எடுத்தாண்ட எழில் அன்றோ எழில். பெரிய புராணத்தின் அரிய சாரமாக உள்ளது இக் கதை கற்பனை என்பதை அந் நூலைக் கற்றவர்கள், கற்பவர்கள், கற்பித்தவர்கள், கற்பிக்கின்றவர்கள் அறிவார்கள். இலகுவான இனிய போதனை முறையில் அமைத்துச் சைவ நெறியைப் புகட்டும் இந் நூல்கள் சிறார்க்கும் பெரியோருக்கும் மாணுக்கர்களுக்கும் ஆசிரியர்கட்கும் பயன்படும்வகையில் அமைந்துள்ளன.

போதனை சத்திப் புலவர் எங்கள் பெரியார். அப்படியிருந்தும் அவருக்கு அன்று பொன்னாடை போர்க்க எவரும இல்லை! — போர்க்கத் துணிந்தவர்களில்லை என்று சொல்லுவோம்.

பொற்கிழி வழங்கியவர்களில்லை! புனைந்துரை பகர விழாக்கள் எடுக்கப்படவில்லை. புகைப் படம் புதினப்பத்திரிகைகளில்வெளிவரவுமில்லை. ( அதிசயம்! இற்றை நாளோ வெனின் நாளுக்கு நாள் இந்த விளம்பர விழா நடைபெறுவதை என்னென்று எடுத்துரைப்பது.

முதலாம் புத்தகம் முதற் படியாக முன்னோடியாகச் சைவத்தைப் புராணங்கள் மூலம் சொல்லிக் கொடுத்தது போல இரண்டாம் புத்தகம் அந்த மூல அறிவைச் செறிவு செய்யும் விதமாக சற்று விரித்துச் சமய சாத்திரத்தைப் புகட்டும் கைந் நூலாக விளங்கி

( வளர்ச்சி 2-ஆம் பக்கம் )

**சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவ ரானினம் வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம் அரனாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

காலயுத்தி ஞூ வைகாசி மீ" கஉ-உ வெள்ளி

## சமயநெறிக்கமைய வைக்கும் முறை அமைந்தால்!

சில நாட்களுக்குமுன் கிடைத்த செய்தி ஒன்றில் இசுலாமிய நாடொன்றில் மதுக் கடைகள் தடை செய்யப்பட்டிருப்பதோடு அதனை உட்கொள்வோர் மீதும் கடைமுறை எடுபடுவதாக அறிகின்றோம். மகம்மது மதம் மதுவுக்குச் சம்மதம் இல்லை என்பதே இதன் கருத்து.

பொல்லாங்கெல்லாவற்றுக்கும் பொய்யே பொதுக் காரணமாவதுபோல குற்றங்கள் யாவற்றுக்கும் குடிவெறியே ஏதுவென்று நீதி மன்றங்கள் அடிக்கடி எடுத்துக் காட்டுகின்றன. சுட்டிக் காட்டியும் இத்தீய பழக்கத்தை விட்டு விலக முடியாமல் இருக்கின்றவர்களை என்னென்று சொல்வோம். சமய நெறிக்கமையாதவர்கள் இவர்கள் என்பதைக் கூற வேண்டியதில்லை.

ஈழ நன்னாட்டில் வாழும் மக்கள் ஏதோ ஒரு மதத்துக்குரியவர்களாயிருக்கின்றார்கள். ஈசன இறக்கின்றாரா என்று கூசாமற் கூறுபவர்கள் அரிதினும் அரிதே. போதைத் தன்மை பொதிந்த மத போதனையும் சாதனையும் என்ற பொருள்படப் புகட்டும் மார்க்சிய வாதிகள்கூட உள்ளத்திற் கள்ளமில்லாமல் நெஞ்சை ஒழித்தொரு வஞ்சகமின்றிக் கடவுளை மனத்தால் வணங்குவது சகசம், அவ்வாறின் இந்நாட்டில் எவ்வாறு மது அரக்கன் அரசாளத் தொடங்கினான் என்பது வியப்பாயிருக்கின்றது.

சமயநெறிக்கமைய ஒழுகுகின்றவர்களே வாழ்வாங்கு வாழ்பவர்கள் ஆவர் என்பதைச் சொல்லிக் கொண்டிருப்பதிற் பயன் யாதும் இருக்கமாட்டாது. இந்த ஒழுக்கம் நடைமுறையிலிருப்பதற்கு வழிவகுப்பதே சமயத் தொண்டாகும்.

மக்கள் மத்தியில் மதுவின் தீமைபற்றிய அச்சம் எழ வேண்டும். நித்தியமும் எத்தனைபேர் குடிவெறியினாற் கொலைக்கும் கொள்ளைக்கும் இவைபோன்ற மா பாதகங்களுக்கும் வழி காட்டப்படுகின்றனர் என்பதைப் புள்ளி விபரங்களோடு புதினப் பத்திரிகைகள் முக்கியத்துவமான முறையில் விளம்பரப்படுத்துவது பொருத்தமானதாயிருக்கும்.

உலக நாடுகளில் எந்தத் தேசத்தில் மதுபானத் தீங்கு மிகக் குறைந்ததாக இருக்கின்றது, எவ்விடத்தில் ஆகக் கூடுதலாயிருக்கின்றது என்பவற்றையும் ஆராய்ந்து அத்தன்மைகளுக்குரிய காரணங்களையும் விளக்கிக் கட்டுரைகள் வெளியிடுவதும் உதவியாகும். எவ்வழியிலாவது மது சமய நெறிக்கொவ்வாததென்ற உண்மை அநுபவத்திற் காட்டுவதுதான் வேண்டப்படுவது.

யாழ். வில்லூன்றி

## இந்து மயான நிர்வாக மாற்றம்

எல்லோரும் அறிந்த வில்லூன்றியில் அமைந்துள்ள மயான நிர்வாக பரிபாலனம் முன் சைவ விருத்திச் சங்கத்தாலும் வில்லூன்றித் தேவத்தானத்தினாலும் நடாத்தப்பெற்றதென்று தேவத்தானத் தர்மகர்த்தாவாக விருந்த சைவத் தொண்டர் திரு சோ. இராசரத்தினம் சிவபதமடைந்த பின் அன்னாரின் புதல்வன் கலாநிதி இ. குமாரவடிவேல் இதற்குரிய அலுவல்களைக் கவனித்து வந்தனர் என்றும் அதற்கென ஆக்கப்பெற்ற தர்மகர்த்தா சபை நடத்தி வந்ததென்றும் இப்பொழுது அம் மயானம் பொருத்தமான முறையில் உபயோகிக்கப்படுவதற்கு யாழ் மாநகராட்சி மன்றத்திடம் ஒப்படைக்கப்படவிருக்கின்றதென்றும் கலாநிதி குமாரவடி

## விஷ மருத்துவமும் பரிகரிப்பு முறைகளும்

வைத்தியகலாநிதி இ. கனகலிங்கம்
ஆயுர்வேத வைத்திய உத்தியோகத்தர், மயிலிட்டிக் கிராமசபை.

[ அ. இ. உ. மன்ற சித்த ஆயுர்வேத மருத்துவ உத்தியோகத்தர்கள் சங்க மலர் வெளியீடு சென்ற வாரம் இடம்பெற்றது. மலர் வெளியீட்டில் கட்டுரை ஒன்றன் தொடர் இங்கே தருவிக்கப்படுகின்றது. ப—ர் ]

( முன் வளர்ச்சி — 2 )

விஷக் கல்:—

விஷம் தீண்டிய ஒருவனுக்கு ஆரம்ப சிகிச்சையாக விஷக் கல்லையும் உபயோகிப்பது வழக்கமாகும். எம் முன்னோர்கள் கடிவாயைச் சிறிது கீறி இரத்தம் பொசியுமிடத்து கோழியின் மலவாசலை கடிவாயில் வைத்து ஒவ்வொரு கோழியும் இறக்கும் வரை தொடர்ந்து இவ்வாறு செய்வார்கள். ஆனால் இதேபோல நீரில் வாழும் சிறு தவளையை எடுத்து முதுகுப்புறத்தில் சிறு சிறு மெல்லிய கீறல்கள் பலவற்றை உண்டாக்கி கடிவாயில் பொருந்த வைத்துக் கட்டினால் முக்கால் பங்கு வீதமான விஷத்தினை இவ்வாறு குறைக்கலாம். மேற்படி ஒரு தவளை உபயோகிக்கும் இடத்திற்கு 14 கோழிகள் சமமாகும். இம்முறை நான்கு தடவைகள் விஷக்கற்கள் உபயோகிப்பதற்குச் சமமாகும்.

வேறு சிலர் உபயோகித்த கிராமபோனின் தகட்டில் கீறில்லாத அழுத்தமான பகுதியை சிறிது சூடு காட்டி கடிவாயில் வைத்துக் கட்டுவார்கள். இதுவும் விஷக்கல் செய்யும் வேலையைச் செய்யும். ஒன்றும் கிடையாதவிடத்து காய்ந்த மொச்சைக் கொட்டை ஒன்றை எடுத்து சிறிது பாகத்தினை வெட்டி வெட்டப்பட்ட பகுதியைக் கடிவாயில் ஒட்டலாம். இது விஷக்கல் ஒன்றின் நான்கிலொரு பாகமே வேலை செய்யும்.

வேதனாசாந்தினிகள்

புடையன், திருநீலகண்டன், தேள், நட்டுவாய்க்காலி, சுருட்டை, செய்யான், புலிமுகச் சிலந்தி இவைகளின் தீராத கடுமையான கடுப்புகளுக்கு மட்டும் உடன் சாந்தியாக வேதனா சாந்தினிகளை உபயோகிக்கலாம்.

கடிவாயில் வேதனையைக் குறைப்பதற்கு

1 தங்கதிராவகம் (Golden Hydrochloride) சேர்ந்த மருந்துகள்

2 பூமத்தை வேரின் உப்புச் சேர்ந்த (Atrophine Sulphate) மருந்துகள்

3 எட்டிக்கொட்டை உப்புச் (Streachine) சேர்ந்த மருந்துகள்

ஊசி மூலம் ஏற்றப்படுகின்றன.

இலண்டனில்

## அரிய பாராட்டு

ஈழத்து மூதறிஞர் வை. முத்துக்குமாரசுவாமி அவர்களுடைய 71-வது பிறந்ததினத்தைக் கொண்டாமுகமாக 20-2-78 பி.ப. 7-45 தொடக்கம் லண்டன் S.W.20ல் உள்ள கெனெத் பிளாக் மெமோரியல் மண்டபத்தில் மூத்து விழா எடுக்கப்பட்டது. லண்டனில் இயங்கும் பல்வேறு தமிழ் சைவத் தலைவர்கள் ஒன்று சேர்ந்த பதினொரு ஆர்வலர்கள் கொண்ட ஒரு செயற்குழுவினரால் விழா எடுக்கப்பட்டது. இதற்குத் திராவிட அறநிலையச் செயலாளர் திரு M. சிவசுப்பிரமணியம் அவர்கள் செயலாளராக அமர்ந்து சகல ஏற்பாடுகளையும் செய்தனர்.

தேவார பாராயணத்துடன் இவ்விழா ஆரம்பமானது. செயலாளர் சிவசுப்பிரமணியம் அவர்கள் வரவேற்புரை கூறினார். பல நாட்டுப் பேரறிஞர்கள்; பண்டிதமணி கணபதிப்பிள்ளை, தொல்புரம் புலவர் நா. சிவபாதசுந்தரனார், மயிலணிப்புலவர் மூத்துக்குமாரசுவாமிப்பிள்ளை, மானிப்பாய் கலையரசு சொர்ணலிங்கம். சுவாமி பிரேமாத்மானந்தா, பாரதவித்யா பவான், மாத்தூர். கிருஷ்ணமூர்த்தி, லண்டன் முரசு ஆசிரியர். கம்பனை இந்து சங்கச் செயலாளர், முதலியோரின் வாழ்த்துக்கள் செயலாளரால் வாசிக்கப்பட்டன. பின் உலகத் தமிழர் மறுமலர்ச்சி நிலையத் தலைவர் திரு. கே. ஞானசூரியன் அவர்கள் இவ்விழாவுக்குத் தலைமை தாங்கினார். தமது தலைமையுரையில், அவர் மூதறிஞர் வை. மு. அவர்கள் தமிழுக்கும், சைவத்துக்கும் ஆற்றிய அரும்பெரும் பணிகள் பற்றி ஆணித்தரமாக எடுத்துரைத்தார். பின் லண்டன் முருகன் கோவில் திருப்பணிச்சபைத் தலைவரும், லண்டன் தமிழ்ச் சங்கத் துணைத்தலைவருமாகிய K. ரங்கநாதன் அவர்கள் "வை. மு. சமூகப்பணியாளர்" என்னும் கோணத்தில் இருநது ஆய்வு செய்தனர். மறுமலர்ச்சி ஆசிரியர் V. C அப்பாசாமி அவர்கள் 'வை மு - எழுத்துப் பணியாளர்' என்னும் கோணத்தில் இருந்து ஆராய்ந்தனர். ஈழத்துக் கண்டி உயர்தரத் தமிழ்ப் பாடசாலை, அதிபர் M. K. கணேஷ் அவர்கள் வை. மு. அவர்களின் வாழ்க்கை வரலாற்றுக்களின் மதிப்பீட்டைத்" திறமாகச் செய்தனர் வை. மு. அவர்கள் செய்த தாகூரின் நாடகங்களின் தமிழாக்கங்களின் மதிப்பீட்டினை திருமதி சுமங்கலி தர்மேந்திரன் அவர்கள் சிறப்பாகச் செய்தனர்.

அதன்பின் லண்டனில் திராவிட அறநிலையத்தைத் தொடக்கியவரும் பொருளாளருமாகிய திரு. வீ நாகரத்தினம் அவர்கள். மூதறிஞர் வை. மு. அவர்களுக்குப் பொன்னாடை போர்த்திப் பொற்கிளி வழங்கினார். இவ்விழாச் செயலாளர் M. சிவசுப்பிரமணியம் அவர்கள் மூதறிஞர் வை. மு. அவர்களுக்கு "வரலாற்று வாணர்" என்னும் விருது வழங்கினார்; மேலும் திரு. வை. காந்தீபன் என்னும் வாலிப ஓவியக் கலைஞரால் தீட்டப்பட்ட ஒரு வர்ணமுக உருவப் படத்தினையும் அன்பளிப்பாக அளித்தார். பின்னர் திரு. வை. மு. அவர்கள் நன்றியுரை நவின்றனர்;

இடைவேளையில் சிற்றுண்டி முதலியன வழங்கப்பட்டது. அதன்பின் தாகூரின் 'சித்ரா' என்னும் நாடகம் (வை. மு. அவர்களின் தமிழாக்கம்) மேடையில் ஒலிபரப்பிகள் மூலம் நடைபெற்றது. இதில் வை. மு. அவர்களின் மகள் திருமதி சாம்பவி சிவபாதசுந்தரம் சித்ராவாகவும், திரு. குமாரகுரு அர்ச்சுனனாகவும், திரு. தர்மேந்திரன் மதனனாகவும், திரு. தங்கேசுவரன் வசந்தனாகவும் பங்கு பற்றினர்.

ஈற்றில் ஓர் இனிய பல்லிசை வாத்தியக்கச்சேரி நடைபெற்றது. அதில் திரு. R. நந்தகுமார் வேயங்குழல் வாசித்தார். திருமதி புனிதம். பேரின்பராசா வயலின் வாசித்தார் திரு. விநோதன் ராஜரத்தினம் மிருதங்கம் வாசித்தார், செயலாளர் சிவசுப்பிரமணியம் நன்றியுரை பகர்ந்தனர். இது போன்ற வைபவம் லண்டனில் முதன்முறை நடந்தேறியது குறிப்பிடத்தக்கது.

மத மாற்றத்தை .....

[ 1-ம் பக்கத்து வளர்ச்சி ]

யது நாவலர் சற்குருநாதர் எடுத்த சிவப் பணியைத் தொடுத்துத் தொண்டாற்றிய சைவப் பெரியாரின் பண்பு இந்தச் சைவபோதத் தொடர் நூல்களில் ஒவ்வொரு பக்கத்திலும் துலங்கியிருந்ததென்று சொன்னால் ஒருவாறு இவ் வெளியீடுகளின் பயனை எடுத்துரைத்ததாய் அமையும். (வளரும்)

வேல் அறிவிக்கின்றார். ஒப்படைக்கும் விழா நாளை (சனிக்கிழமை) காலை 9 00 மணிக்கு நடைபெறவிருக்கின்றது. யாழ் மாநகர விசேட ஆணையாளர் மயானத்தைப் பொறுப்பேற்பார் என்று மயான பரிபாலனத்தினர் விளம்பரம் செய்திருக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# க பொ. த. வகுப்பு
# சைவ சமய நெறி

1978 டிசம்பர் மாதப் பரீட்சைக்கும், அதற்குப் பின்னரும் உபயோகிக்கத்தக்கவாறு கல்வித் திணைக்களத்தின் 1978-ம் ஆண்டு புதியபாடத் திட்டப்படி எழுதப் பெற்று வெளிவந்துள்ளது. மாணவர்களுக்கு ஏற்ற இலகுவான நடையில் தெளிவான விளக்கங்களுடன் ஆக்கப் பெற்றது.

சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரம்பிள்ளை அவர்களின் திருவருட்பயன் 10 அதிகாரங்களும் அவர் உரையுடன் சேர்க்கப்பட்டது. அன்னாரின் 2ஆம் சைவபோதம் பெரும் பகுதியும், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களின் பெரியபுராணம், 2ஆம் சைவவினாவிடை, பண்டிதர் ம. வே. திருஞானசம்பந்தர் அவர்களின் சமயகுரவர், சந்தானகுரவர் சரித்திர வரலாற்றுச் சுருக்கமும் பாடத் திட்டத்துக்கு அமையத் தொகுக்கப்பெற்றுள்ளது.

தோத்திரப்பகுதிப் பதிகங்கள் முழுமையாகவும், திருவெம்பாவை 20 பாடல்களும் உரையுடன் கொண்டது. அரசாங்கப் பரீட்சைக்கும், சபையாரின் சமயபாடப் பரீட்சைக்கும் மிகவும் உதவியான நூல்.

— மாணவர்களுக்கு மிகச்சிறந்த பாடநூல் —

**சைவ பரிபாலனசபை வெளியீடு:**

தனிப்பிரதி: விலை ரூபா 8-00

பாடசாலைகளுக்கும், தொகையாகப் பெற்றுக்கொள்பவர்களுக்கும் 20% கழிவு கொடுக்கப்படும்.

கிடைக்குமிடம்:

**சைவப் பிரகாச அச்சியந்திரசாலை**

450, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 356

## 'குறிப்பறி' முருகநாயனார் குருபூசை

**குரவர்களே குறிப்பிடக் கூடிய இறை அன்பு பூண்ட அடியார்களின் குருபூசை விசேட சிறப்புடையது.**

**முப்போதும் முடிசாய்த்துத் தொழுது நின்ற ஆதிசைவர் முருகநாயனாரைத் திருஞானசம்பந்த சுவாமிகள் குறிப்பிடும்பொழுது:**

"தொண்டர் தண்கயம் மூழ்கித் துணையலும் சாந்தமும் புகையும்
கொண்டு கொண்டடி பரவிக் குறிப்பறி முருகன் செய்கோலம்
கண்டுகண்டு கண்குளிரக் களிபரந்து ஒளிமல்கு கள்ளார்
வண்டு பண்செய்யும் புகலூர் வர்த்தமா னீச்சரத் தாரே"

**என்று ஆரா அன்புடன் பாடுகின்றார். திருப்புகலூர் வர்த்தமானிச்சரப் பதிகத்தில் (2ம் திருமுறை, சுவாமி-வர்த்தமானீச்சுரர், தேவி - கருக்தார்க்குழலி)**

**குறிப்பறிதல் திருத்தொண்டின் முதிர்ந்த நிலை என்பதை ஆளுடைய பிள்ளையாரும் அப்பர் அடிகளும் மாணிக்கவாசக சுவாமிகளும் ஆங்காங்கு எடுத்துக்காட்டியிருக்கின்றனர்.**

## நீதிமன்ற விற்பனவு
### விளம்பரம்

சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில்

1. இராசையா விமலேஸ்வரனும் பெண்
2. திலகவதியும் நுணுவில் கிழக்கு சாவகச்சேரி, வழக்காளிகள்

வழ இல ஈடு 5051
எதிராக
கல்லதம்பி கந்தையா, நுணுவில் கல்வயல் ரோட், சாவகச்சேரி
எதிராளி

சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தால் மேற்படி 5015-ம் இலக்க வழக்கில் எனக்குக் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி பின்னால் ஆதன இடாப்பில் விவரிக்கப்படும் ஆதனம் 1978-ம் ஆண்டு ஆனி மாதம் 26-ம் திகதி திங்கட்கிழமை(26-6-1978) முற் பகல் 11 மணியளவில் அவ்வாதனத்துக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

தீர்வைத் தொகை: ரூபா 7708/-ம் மேலும் ரூபா 5000/-க்கு 2-11-76 தொடக்கம் 20-5-77 வரைக்கும் நூற்றுக்கு 10 வீத வட்டியும் பின் கூடிவரும் முழுத் தொகைக்கும் 20-5-77 தொடக்கம் முழுவதும் இறுத்துத் தீர்க்கும்வரை நூற்றுக்கு 9 வீத வட்டியும் வழக்குச்செலவு ரூ. 626-15 சதமும்.

### ஆதன இடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தென்மராட்சிப் பகுதி சாவகச்சேரிக் கோயிற்பற்று நுணுவில் இறை. வனவில் கற்புலம் நிபர. 5, 9/16 ஷ வனவில் கற்புலமும் மறு பிரிவும் 11, 1/4 கூடிய நிபர. 16, 13/16, இதில் மேற்குப்பக்கமாக நிபர. 8 எட்டுப் பரப்புக்கும் எல்லை கிழக்கு எதிராளியின ஆதனம். வடகக்கு ரோட்டு மேற்கு ஒழுங்கை. தெற்கு வீரகத்தி முருகேசுவுக்கும் சகோதரிக்குமுரிய ஆதனம், இதடங்கலுமிதைச்சேர்ந்தவைகளனைத்தும் பதிவு F 437/191

எஸ். வி. சதாசிவம்
நீதிமன்ற விற்பனவு ஆணையாளர்

சாவகச்சேரி, 6-5-78.

129 2-6-78.

நாயன்மார்கட்டு சனசமூகநிலைய

## 3-ம் ஆண்டுவிழா

### கலை நிகழ்ச்சிகள்

யாழ் நாயன்மார்கட்டு சன சமூக நிலையத்தின் 3-ஆவது ஆண்டு விழா எதிர் வரும் 9-6-78 வெள்ளிக்கிழமை மாலை யாழ். நாயன்மார்கட்டு ஸ்ரீ இராஜ ராசேஸ்வரி பேய்ச்சியம்பாள் கோவில் திருவீதிமுன்றலில் நிகழவுள்ளது. இரவு 7-00 மணியளவில் ஆரம்பமாகும் இவ்விழாவில் நிலைய மாணவ மாணவிகளின் சிற்றுரையும், அறிஞர்களின் கருத்துரைகளும் இடம்பெறு . அதையடுத்து பட்டிமன்றம் நிகழும். கலைநிகழ்ச்சிகளில்: 'முன்றுதெய்வங்கள்" எனும் புராண நாடகமும் 'அணை கடந்த வெள்ளம்' எனும் சமூக சீர்திருத்த நாடகமும் 'மகத நாட்டு இளவரசி' எனும் கற்பனைச் சரித்திரநாடகமும் "பொய்ண்டு பரமசிவம்" எனும் நகைச்சுவை நாடகமும் இடம்பெறவுள்ளன. ந நி.

## சீர்காழிச் செல்வர் வாழ்! வாழி! வாழி!



பத்தர் "சர்க்கரைப் பந்தலிற் தேன்மாரி பொழிந்தன்ன' என்று கூறுவார்கள்! அதைக் கேட்டிருக்கிறேன்; — உளப் பூரிப்பினால் கூத்தாடியிருக்கிறேன்; — ஆனால் — வேணும் வேணும் என்று மக்கள் வெள்ளம் கரைபுரண்டு பேவ, 'தந்தோம்-தந்தோம்' என்று தேன்மாரி பொழிந்ததை நேரிற் பார்த்தேன்; கேட்டேன்; சூழவிருந்த ஆயிரக்கணக்கான பத்தர்கள் மதுவுண்ட வண்டுகள் போல மயங்கித்திளைத்தனர்! -ஆம்! முந்தாநாள் சுட்டிபுரம் அம்பாள்திருச்சந்நிதியில் இசைச் சுடர்' சீர்காழி கோவிந்தராசனது இனிய இசைவிருந்து நிகழ்ச்சியை 'தேன் மாரி' 'தேன் மாரி' என்றுதான் பக்திச் செல்வர்கள் வர்ணித்தனர். வாழ்த்திசைத்தனர்?

சித்தர்: "விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்-விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே ......" என இரவு 8 மணிக்கு இசைக்க எடுத்த சீர்காழியரின்குரல் பின்இரவு 3 மணி வரையும் கணீர்! கணீர்! என ஒலித்தது! என்ன இனிமை? எவ்வளவு அற்புதம்? ஆம்! சீர்காழிப்பதியலல்வா இவன்பதி? வாழி! சீர்காழிச் செல்வர்!

(நாயன்மார்—நாதன்)

## சமாதான நீதவான்

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த சமூகத் தொண்டரும் வட்டுக்கோட்டை திருமுறைச் சபையின் அமைப்பாளருமான திரு.நாகலிங்கம் நடராசா கௌரவ நீதிஅமைச்சரினால் யாழ்ப்பாண நீதிநிருவாக மாவட்டத்திற்கு சமாதான நீதவானாக மீண்டும் நியமிக்கப் பட்டு அன்னார் அண்மையில் யாழ்ப்பாண மாவட்ட நீதிபதி திரு. ஜே. ஜி. ஆசீர்வாதம் அவர்கள் முன் சத்தியப்பிரமாணஞ் செய்து தனதுபதவியை ஏற்றுக் கொண்டுள்ளார். அன்னார் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி யாழ்ப்பாணக்கல்லூரி, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவராவர்.

திரு. என். நடராசா ஜே. பி 32 வருட அரசசேவையின் பின் 1973ம ஆண்டு யாழ்ப்பாண [illegible] [illegible] அறப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றார்

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம்

காலம் சென்ற தொண்டைமானாறு வேலுப்பிள்ளை பொன்னம்பலம் என்பவரின் மரணசாதனமில்லாச சொத்தின் விடயத்தில் மரணமெய்தியவர்
பொன்னம்பலம் கைம்பெண் அம்பாலிகை தொண்டைமானாறு
மனுதார்

எதிர்

மரணசாதன நியாயாதிக்கம்: இல, 1042

1. வேலுப்பிள்ளை கெங்காதரன்
2. செல்லத்துரை நாகேஸ்வரன்
3. நடராசா கைம்பெண் நாகேஸ்வரி
4. தையல்பாகா செல்வகுரு
5. பெண் இராஜேஸ்வரி
6. சிவப்பிரகாசம் சபாநாயகம்
7. சிவப்பிரகாசம் வேலுப்பிள்ளை
8. கந்தசாமி கைம்பெண் அன்னபூரணி அம்மா

எல்லோரும் வல்வெட்டித்துறை எதிர் வாதிகள்

மேலே உள்ள இலக்கங்கொண்ட மரண சாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறை உள்ள ஆள் எவரும் 1978ம் ஆண்டு ஆனி மாதம் 16ம் திகதி முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்,

நீதிமன்ற கட்டளைப்படி

(ஒப்பம்) பதிவாளர்

1978-ம் ஆண்டு வைகாசி மாதம் 18ஆம் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

## ஈட்டு வழக்கில் விற்பனவு அறிவித்தல்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில்

கரணவாய் வடக்கு 1. இராமலிங்கம் பொன்னம்பலம்
2. பெண் தனபாக்கியம்
வழக்காளிகள்

எதிராக

இலக்கம்: ஈடு 723

கரணவாய் தெற்கு 1. ஐயாத்துரை சிவப்பிரகாசம்
2. பெண் இராசம்மா
எதிராளிகள்

மேற்குறித்த வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்குக் கிடைத்த விற்பனவுக்கான அதிகாரப் படியும் இதன்கீழ் விபரிக்கப்படுமாதனம் 1978-ம ஆண்டு ஆனி மாதம் 29-ம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 - 30 மணி தொடக்கம குறித்த காணியிலாகவிருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி உடுப்பிட்டிக் கோயிற்பற்று கரணவாய் இளகாமக்குறிச்சி யிறை "பெரிய சீமா" நிபர. 11. 1/8. இதில் பத்தில் மூன்று பங்குக்கு ஆட்கிப்படி நிபர. 3, குளி6, 3/40. எல்லை கிழக்கு சின்னையா பெண் வள்ளியம்மைக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். வடக்கு ஒழுங்கையும் கதிரவேலர் ஐயாத்துரைக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். மேற்கு பொன்னர் சின்னையாவுக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். தெற்கு ஐயா சின்னையாவுக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம், இதடங்கலிற் சொரியலாக நாலில் மூன்று பங்கில் அரைவாசியும் அதைச்சேர்ந்த நிலம் பனைகள் வேம்பும்.

| | |
|---|---|
| துரட்சித்தொகை: . . . | ரூபா 950-00 |
| ரூபா 500க்கு 22-6-1977 தொடக்கம் 28-6-1977 வரை 12 வீத வட்டி | ரூபா 60-00 |
| | ரூபா 1010-00 |
| ரூபா 1010/-க்கு 29-6-1977 தொடக்கம் 1978 ஆனி மாதம் 29-ம் திகதிவரை 9% வட்டி | ரூபா 90-90 |
| கோட்டுச் செலவு ரூபா | 351-85 |
| மொத்தம் ரூபா | 1452-75 |

'உமாபதி"
நெல்லண்டை ரோட்,
தும்பளை,
பருத்தித்துறை, 24-5-78

**R. S. இராமநாதன் J. P**
நீதிமன்ற விற்பனவு ஆணையாளர்
விலைமதிப்பாளர், ஏலவிற்பனையாளர்.

127 | 2 6-78

"அன்றறிவா மென்னு தறஞ்செய்க மற்றது
பொன்றுங்காற் பொன்றுத் துணை"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## THOUGHTS TO BE TREASURED

உழவன் உழஉழ வானம் வழங்க
உழவன் உழவினில் பூத்தது வேளை
உழவன் உழத்தியர் கண்ணோக்கும் என்றிட்டு
உழவன் அதனை உழவு ஒழிந்தானே.

When the farmer ploughs his fields repeatedly and the rains fall, the planets thrive and flower (and bear crops in abundance) in the ploughed fields The farmer then ceases from his activities, leaving the crops to the care of the womenfolk.

This is all allegorical language. The farmer is the devotee. The repeated ploughing is the practice of various forms of Sadanas and religious austerities The pouring rain is the descent of God's Grace. The crops are the fruits of the religious practices, Gnanam or Godly Knowledge. The ladies that guard the crops are the different forms of manifestation of Chit Sakti. The devotee should cease from his egoistic activities and dedicate all his actions to God இறை பணி நிற்றல்.

Hindu Organ

Friday, 2nd June, 1978

# U N. can become more USEFUL

It is to the credit of the U. N. O. that it has extended its scope and pattern of work to cover the main needs of the people of the world We refer to the U N. E S. C. O the F. A. O. the W H O. and other such bodies that attend to exclusive subjects, However, in striking a balance sheet of results, benific and malefic, the weight is heavily on the side of evil. This is because the massacre of human beings in the course of civil strifes and undeclared wars has exceeded the total number of civilians who were killed during World War II- Added to this slaughter, there is the threat of surprise attacks as in the case of hijacking and kidnapping, holding innocents to ransom.

The U. N. O owes a duty to the people to guarantee security to all human beings. The fact that conferences on "disarmament" are being held often cannot be considered to be a factor that can give the people hope of safe living. The disarming smiles of statesmen and their equally persuasive propaganda in the cause of "Disarmament" cannot any longer help to inspire people with any confidence in the futile international conferences

We read with amusement the report that the Big Powers at the top are practically agreed on the need for a ban on production of nuclear weapons, In between these statements we also learn reports about the relative strength of the U, S. A and the Soviet Union in armaments

Thus it is clear that suspicion lurks behind every statement of recognized statesmen. Our suggestion is that the U N. O. should hold a seminar on "Religion and Politics" so that the leaders of the one hundred and fifty one nations of this August Assembly could explore the possibilities of bringing religious conciousness to the rescue of the world from savagery.

There are countries that have declared conceptions of religious morals To them anything that tends to destroy human values should be abhorrent In other words they all would campaign for the total prohibitions of arms, nuclear or otherwise

Then only can the U. N. become more useful

The reasoned writings of Saiva Periyar Shivapadasunderanar indicate a basis for discriminating right from wrong (vide reproduction from 'The Glories of Shaivasim' appearing elsewhere in this issue of the Hindu Organ)

## Saiva Periyar Centenary Reproduction

# GLORIES OF SHAIVAISM

Changes take place not only in the inorganic Universe. At one time, this earth had been part of the sun. It must have been a burning mass at the time of separation. Life was impossible in that burning mass But we see life now, and this is a change; not merely life, but life of such marvellous development as man; not merely man but men of such wonderful intelligence as Einstien and Ramanujam. It is a tremendous change from lifelessness to the intelligence of Einstien, and the change must have been caused by something which is all-knowing and which Shaivaism calls God.

A reason for the belief in the existence of God, comes from the need for protecting ourselves and our belongings. Everyone wants to be self, and everyone wants his belongings also to be safe. Nobody wishes to be murdered or robbed. If he and his prop rties are to be safe, people must know what is right and be bound to do what is right. A man who believes in God. and follows a particular religion finds out from its revelation what is right, and is bound by it to do the right

The science of ethics has miserably failed in its attempt to discover a basis for discriminating right from wrong. Every ethical theory put forward by ethics has been found to be slippery. Tell an atheist that just as he has the right to claim the safety of his person and property others also have the right to claim the safety of their persons and properties and that he ought to respect their claim, he can say "There is no such thing as right. I have no claim for my personal safety. What counts is might. If I do not have the might to protect my property. I must lose it. If I have the might to take another man's prop rty, I take it. By might I mean the might of myself and of those who help me, including the State, if it happens to be on my side. I will stab or murder, steal or rob, break the house or set fire to it, if these will serve my interests, provided my safety is ensured Even highly civilised countries like England and America, France and Germany, regard might as the supreme arbiter and have, on this basis, fought the two great World Wars of the present century. No sensible man will accept your dictum 'Do unto others what you wish that they should do unto you'. This is the dictum of weaklings and imbeciles According to your line of reasoning, a lamb has as much right to live as yourself. But you slaughter it and eat it because you have the might to do so. An atheist is not bound to have any regard for morals. The existence of God and of His revelation must be postulated for the acceptance of moral laws. Siddhair says " The true dharma is Shiva's Law " It may be observed in this connection that it is only Shaivaism which prohibits all kinds of wrongs, including killing, meat - eating and drinking

## Avoidance of Acts of Violence

Suitable remedies for the avoidance of acts of violence illegal and immoral referred to in different languages in different contexts and in regard to different individuals and institutions, of whatsoever nature and from whatsoever source, unofficial and official are urgently required. Among such remedies could be the following: This list is not exhaustive,

(1) The practice of Religion and appropriate steps by all religious denominations consisting both the clergy and laity

(2) Appropriate Legal Proceedings and Enactments of suitable laws.

(3) Political, Constitutional, and other national adjustments and solutions immediate, interim, gradual, and long range.

(4) Police and Governmental action.

(5) The creation of public opinion and social concionsness.

(6) Educational, Cultural and recreational program

(7) Relief to the un-employed

(8) Greater co-operation between the public and police The maximum possible friendliness between the two is a great desideratum

(9) Provision for Social Justice

(10) The invaluable assistance of the Press

(11) Inter - communal, inter - religious, inter - sectional and inter-regional contact and co - operation and national unity.

These are just a few; there could be many more It is respectfully submitted that the entire subject could be dealt with by the present Commission functioning through the Chief Justice Emeritus Hon. Mr. M. C. Sansoni, It would be helpful if the same Commission which has been entrusted with the task of reporting on the Incidents of 1977 be entrusted with this subject also and if necessary the Terms of reference of the Commission be adequately enlarged.

As in many things, there is no sincere remedy for this malaise in the body politic of Sri Lanka. To achieve permanent success, there could also be no short cuts. This subject which is of extreme national importance and gravity and which could also perhaps have international repurcussions having regard to the fact that the whole world is one merits very comprehensive, dispassionate and skilled consideration by very weighty personalities and most careful action by the State and the people

S. SIVASUBRAMANIAM
Life Member, Jaffna Saiva Paripalana Sabhai
Honorary Secretary
Council for National Unity and Welfare

இந்துசாதனம்
சந்தா விபரம்

உள்ளூர் — ஆண்டு 18/—
புறநாடு — ஆண்டு 50/—
( ஆகாய வழி ) 75/—

அதிபர்
450, கே.கே, எஸ் வீதி
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்;

Pri ted nd published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna at their Saiva Prakasa Press, 450 K. K. S. Road, Vannarponnai, Jaffna on Friday, June 2nd, 1978.

EDITOR - IN - CHIEF: R. N. SIVAPIRAKASAM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org